## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

**அ.வ.எண்.** 3/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஏழுமலை | மதம் | : |
| த/பெ | : கிருஷ்ணன் | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**03.09.2024**

<u>வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். 1ம் பிரதிவாதி கிருஷ்ணன் யார் என்றால் என் அப்பா ஆவார். நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தமிழ் நன்றாக படிக்க தெரியும் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 4 பேர். ஒரு அண்ணன், ஒரு தம்பி, ஒரு தங்கை ஆவர்கள். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சொத்து என் அப்பா எனக்கு மனப்பூர்வமாக எழுதி வைத்ததை ரத்து செய்ய கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2. தாவா சொத்தின் புல எண்கள் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 103 செண்ட் ஆகும். அதாவது 1 ஏக்கர் 3 செண்ட் ஆகும். புல எண்கள் 29/1, 29/2, 29/3, 29/6, 29/12 ஆகும். ஆக மொத்தம் 5 புல எண்களில் சொத்து எழுதி வாங்கினேனா என்றால் ஆமாம். மொத்தம் 3 பேர் இருந்த போது எனக்கு மட்டும் ஏன் எழுதி வைத்தார் என்றால் நடுவில் ஒரு விபத்தில் எனக்கு முதுகு எலும்பில் ஒரு பிரச்சனை ஏற்பட்டு எனக்கு வேலைக்கு செல்ல இயலவில்லை. எனவே எனக்கு எழுதி வைத்தார். எனக்கு முதுகில் அடிப்பட்டதால் எனக்கு சொத்து

எழுதி வைத்தார் என்ற விவரத்தை எனது பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

3. கூட்டு குடும்ப சொத்தில் என் அப்பா என்னுடன் பிறந்த மற்ற சகோதர சகோதரிகளுக்கு பாக ஆவணம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா 3, 5 ஆகிய சொத்துக்கள் என்ன வகையில் என் அப்பாவிற்கு வந்தது என்று சொல்ல முடியுமா என்றால் என் தாத்தா வழியில் என் அப்பாவிற்கு கிடைத்த பூர்வீக சொத்துக்கள் ஆகும். பூர்வீக சொத்துக்களை பாகம் பிரிக்காத நிலையில் எனக்கு எழுதி வைக்க என் அப்பாவிற்கு உரிமை இல்லை என்றால் என் அப்பா பெயரில்தான் இருந்தது. எனவே எழுதி வைத்தார். ஒரு சொத்து மட்டும்தான் என் தாத்தாவுடையது. மற்றவை என் அப்பா சுயமாக சம்பாதித்ததாகும்.

4. தாவா சொத்துகளை பட்டா மாற்றிவிட்டேனா என்றால் 2 சொத்துக்களை தவிர மற்றவற்றைகளை மாற்றிவிட்டேன். என்ன என்ன சொத்துக்கள் பட்டா மாறவில்லை என்றால் 29/6, 29/3 ஆகும். ஏன் அந்த இரண்டு சொத்துக்கள் மற்றும் பட்டா மாற்றவில்லை என்றால் அது என் அப்பா, சித்தப்பா பெயரில் உள்ள கூட்டு பட்டாவில் உள்ளது. நான் சொல்வதுபோல் என் அப்பாவிற்கு தனிப்பட்ட சொத்துக்கள் இல்லை என்றாலும் என் அப்பாவிற்கு பூர்வீக கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றாலும் சரியல்ல.

5. பாகம் பிரிக்கப்படாத மீதியுள்ள சொத்துக்களை பொறுத்து பாகம் பிரிக்க வேண்டும் என்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் என் அப்பா மீதியுள்ள சொத்துக்களை தன்னிச்சையாக விற்றுவந்ததால் பாகம் பிரிக்க வழக்கறிவிப்பு அனுப்பியுள்ளேன். வழக்கு சொத்துக்களை என் அப்பா விற்றுவிட்டார் என்பதை பொறுத்து நான் ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் 2, 3 பிரதிவாதிகளான அரசு அதிகாரிகளை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் என் அப்பா RDO விடம் மனு கொடுத்தார். எனவே நான் அவரை தரப்பினராக சேர்த்தேன்.

6. நான் 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் என் அப்பா ரத்து செய்ய வேண்டும் என்று கேட்பதால் அதை செய்ய கூடாது என்பதற்காக சேர்த்துள்ளேன். 16.12.2020 ல் RDO விடம் ஆஜரானேனா என்றால் ஆஜரானேன். அன்றைய தினம் என் தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். நான் ஆஜரானது தொடர்பாக இறுதி உத்தரவு ஏதேனும் பிறப்பிக்கப்பட்டதா என்றால் மாவட்ட ஆட்சியர் பிறப்பித்தார். எந்த தேதியில் உத்தரவு பிறப்பித்தார் என்ன உத்தரவு பிறப்பித்தார் என்றால் மாதம் ரூ.5000 கொடுக்க வேண்டும் என்று 2024 ம் வருடம் 1ம் மாதம் உத்தரவு பிறப்பித்தார்.

7. நான் பணம் அனுப்பியதற்கு ஆதாரம் ஏதும் உள்ளதா என்றால் வங்கியில் 1ம் பிரதிவாதி கணக்கில் செலுத்தியதற்கான ரசீது என்னிடம் உள்ளது. நான் இதுவரை எந்த பணமும் அனுப்பவில்லை என்றாலும் 2, 3 பிரதிவாதிகள் மீது எந்த பரிகாரமும் கோரவில்லை என்றாலும் நான் 2, 3 பிரதிவாதிகள் எடுக்கும் நடவடிக்கை வேண்டி இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தன்னிச்சையாக 1ம் பிரதிவாதி எனக்கு எழுதி வைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு எழுதிவைக்க வேண்டிய அவசியம் 1ம் பிரதிவாதிக்கு இல்லை என்றால் சரியல்ல.

8. தாவா சொத்தில் எனக்கு சுவாதீனத்தை 1ம் பிரதிவாதி தடை செய்ததாக கூறியுள்ளதை பொறுத்து காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. 10.01.2021 ல் என் சுவாதீனத்தை தடை செய்ய 1ம் பிரதிவாதி வந்ததாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி படிக்க தெரியாத அப்பாவி என்பதால் நானாக வா.சா.ஆ 1 ஆவணத்தை தயார் செய்து மோசடியாக கட்டாயப்படுத்தி அவரிடம் கையெழுத்து பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

9. தாவா சொத்துக்கள் அனைத்தும் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்ற நிலையில் நான் என் அப்பாவிடம் மோசடியாக கையெழுத்து பெற்ற வா.சா.ஆ 1 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என் தம்பி முரளி

பிறவியிலேயே ஊணமா என்றால் அவருக்கு கருட பார்வையாகும். பிறவியிலேயே ஊணம் இல்லை. அவருக்கு தற்சமயம் ஒரு கண் பார்வை இழந்துவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை ஏமாற்றி எழுதி வாங்கி கொண்டேன் என்றாலும் அதை கேட்க வந்த என் அப்பாவை அடித்து கையை உடைத்தேன் என்றாலும் என் தம்பியை அடித்து கண் பார்வையை இழக்க வைத்தேன் என்றாலும் நான் அடிக்கவில்லை. என் அப்பாவும் என் தம்பியும் இருசக்கர வாகனத்தில் வந்து என்னை கிணற்றில் குளிக்க கூடாது என்று அடித்துவிட்டு காவல் நிலையம் செல்லும்போது கிழே விழுந்துதான் அடிப்பட்டது.

10. அவ்வாறு என்னை அடித்துவிட்டு திரும்ப செல்லும்போது கிழே விழுந்து அடிப்பட்டது தொடர்பாக ஏதேனும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்களா என்றால் இல்லை. உண்மையிலேயே சொத்தை 1ம் பிரதிவாதியிடம் இருந்து வாங்கியிருந்தால் விளம்புகை பரிகாரம் கேட்டிருப்பேன் என்றாலும் விளம்புகை பரிகாரம் கேட்காததால் என் வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. வழக்கில் 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் கேட்டால் எனக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரம் தெரிந்துவிடும் என்பதால்தான் 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் எதுவும் கேட்காததால் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

11. பிராது 1 முதல் 6 வரை பத்திகளில் சொல்லியுள்ள விவரம் தவறு என்பதால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)